**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 191 /2023**

**Deposition of P.W.** 1

Name : ஸ்டீபன்

S/o, D/o, W/o : ராஜப்பன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:09.07.2025

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் மாத்தூரில் வசித்து வருகிறேன். நான் பூதபாண்டி வேளாண்மை துறையில் உதவி வேளாண்மை அலுவலராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகளை பார்த்துள்ளேன். 21.03.2021ம் தேதி சட்டமன்ற தேர்தலை ஒட்டி பத்மனாபபுரம் தொகுதிக்குட்பட்ட பகுதியில் வீடியோ கண்காணிப்பு பணி செய்து வந்தேன். தி.மு.க. வேட்பாளர் மனோதங்கராஜ் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார். பூக்கடையில் 09.00 மணிக்கு கேஸ் சிலிண்டர் மற்றும் பெட்ரோல் உயர்வை பற்றி பேசும் போது வாக்குவாதம் ஏற்பட்டது. என்னுடன் வீடியோ கிராபராக பணிபுரிந்த அபிலாஸ் என்பவர் அதனை வீடியோ பதிவு செய்தார். எதிரிகள் இருவரும் வீடியோ எடுப்பதை பார்த்து கெட்ட வார்த்தை பேசினார்கள். அபிலாசிடமிருந்து வீடியோ கேமராவை பிடுங்கி நீதிமன்றத்தில் நிற்கும் எதிரிகளில் வலது புறமாக நிற்கும் எதிரி

குமாரதாஸ், செல்லத்துரை பிடுங்கி உடைத்து விட்டார். நான் காவல்கட்டுபாட்டு அறைக்கு போண் செய்த போது என் கையிலிருந்து செல்போனை எதிரிகளில் வலது பக்கம் நிற்கும் நபர் உடைத்து விட்டார். எனது செல்போனின் மதிப்பு ரூ.19,000/- வீடியோ கேமராவின் மதிப்பு ரூ.1,71,000/- ஆகும். தக்கலை காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நாங்கள் பூக்கடைக்கு அரசு பணி நிமித்தமாக போனோமா அல்லது கட்சி பணி நிமித்தமாக போனோமா என்றால் அரசு பணி நிமித்தமாக போனோம். அரசு பணியாக சென்றதை காட்ட எழுத்து பூர்வ உத்தரவை போலீசாரிடம் கொடுக்கவில்லை. அரசு பணியாளர் என்ற எவ்வித ஆவணமும் இல்லாமல் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அரசு பணியாளர் என்ற ஆவணம் இல்லாமல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பூக்கடை சந்திப்பில் தேர்தல் பிரச்சாரம் தொடர்பாக வீடியோ கண்காணிப்பாளராக பணி செய்ததை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 21.03.2021ம் தேதி 09.00 மணிக்கு சட்டமன்ற உறுப்பினரும், வேட்பாளருமான மனோதங்கராஜ் பிரச்சாரத்திற்கு சென்றார் என்றால் சரிதான். அப்போது அந்த ஊருக்கு அவர் பிரச்சாரத்திற்கு வரக்கூடாது என்று அவரை ஊர்மக்கள் வழிமறித்தார்கள் என்றால் சரியல்ல. வேட்பாளரை வழிமறித்து கேள்வி கேட்டதற்காக ஊர் பொது மக்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. குற்ற எண்.159/2021ல் இதே நேரத்தில் சம்பவம்

நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. இவ்வழக்கிலும், பூக்கடை சந்திப்பில் 21.03.2021ம் தேதி இரவு 09.00 மணிக்கு சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் நான் பூக்கடை சந்திப்பில் இரவு 09.00 மணிக்கு நான் இருந்திருந்தால் ஊர் மக்கள் வழிமறித்தது பற்றி தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. பிரச்சார கூட்டத்திலும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் சுமார் 500 பேர் இருந்தார்கள் என்றால் சரியல்ல. சுமார் 20 பேர் இருந்தார்கள். சம்பவம் முடிந்து 1 மணி நேரத்தில் புகார் கொடுத்து விட்டேன். கேமராவையும், செல்போனையும் அடித்து நொறுக்கும் போது எதிரியின் பெயர் தெரியாது. ஆனால் ஆளை தெரியும். புகாரில் எதிரியின் பெயர் குறிப்பிட்டு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணை செய்து எதிரிகளின் பெயர்களை கண்டு பிடித்தார்கள். புகார் கொடுப்பதற்கு முன்னரே போலீசார் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். கட்டுப்பாட்டு அறைக்கு போண் செய்த உடன் போலீசார் வந்து விசாரித்தார்கள். போலீசார் விசாரித்த பிறகு தான் எதிரிகளின் பெயர் தெரியும். சம்பவ நாளன்று எதிரிகளை பார்த்த பிறகு இன்று தான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன். 22.03.2021ம் தேதி எதிரிகளை கைது செய்தார்கள் என்றால் சரியல்ல. 21.03.2021ம் தேதியே போலீசார் எதிரிகளை அழைத்து வந்து விட்டார்கள். போலீசார் வந்து ஒருவரை மட்டும் தான் அழைத்து வந்தார். மற்றொரு எதிரியை சம்பவத்திற்கு பிறகு இன்று தான் பார்க்கிறேன். ஊதா சட்டை போட்டிருக்கும் எதிரியின் பெயர் செல்லத்துரை, ரோஸ் சட்டை போட்டிருக்கும் எதிரியின் பெயர் குமாரதாஸ். (இன்று ரோஸ் சட்டை போட்டிருக்கும் எதிரியின் பெயர் செல்லத்துரை, ஊதா சட்டை போட்டிருந்த எதிரியின் பெயர் குமாரதாஸ்) நான் எதிரிகளை



பார்த்ததே இல்லை என்றால் சரியல்ல. அரசு வாகனத்திற்கு G என்ற குறியீடு வரும் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. புகாரில் அரசு

வாகனம் என்றும், அந்த வாகனம் கூட்டுறவு சங்கத்தை சார்ந்த வாகனம் என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த வாகனத்தில் அரசு வாகனம் என்று ஒட்டப்படவில்லை என்றால் சரியல்ல. போனையும், கேமராவையும் காவல்நிலையத்தில் ஒப்படைத்தோம். உடைந்ததில் எங்களுக்கு கிடைத்த பாகத்தை போலீசாரிடம் கொடுத்தோம். செல்போனையும், கேமராவையும் நீதிமன்றத்திலிருந்து வாங்கவில்லை. எனது செல்போண் உடைக்கப்படவில்லை என்றும், செல்போண் கடையிலிருந்து உடைந்த போனின் பகுதிகளை வாங்கி வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பழைய சேதமடைந்த வீடியோ கேமராவை போலீசாரிடம் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். கடைக்காரர்கள் சம்பவத்தை பார்த்தார்களா, இல்லையா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. மின்சாரம் இல்லாததால் பக்கத்து கடைக்காரர்கள் பார்த்தார்காள, இல்லையா என்று எனக்குத் தெரியாது. மின்சாரம் இல்லாததால் எங்களை தாக்கியது யார் என்று குறிப்பிட முடியாது என்றால் சரியல்ல. சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் 500 நபர்களுக்கு மேல் இருந்தார்கள் என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதால் 2 நபர்களின் பெயர்களை எழுதிக்கொடுத்தோம் என்றால் சரியல்ல. புகாரை நான் தான் எழுதினேன். காவல்துறையினர் சொல்லி கொடுத்து புகாரை எழுதினேன் என்றால் சரியல்ல. பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 191 /2023**

**Deposition of P.W.** 2

Name : அபிலாஸ்

S/o, D/o, W/o : ஹேமச்சந்திரன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:09.07.2025

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் குலசேகரத்தில் வசித்து வருகிறேன். நான் போட்டோ கிராபராக பணியாற்றி வருகிறேன். 2021ம் வருட சட்டமன்ற தேர்தலின் போது தேர்தல் பணிக்காக ஒப்பந்த அடிப்படையில் நான் விடியோ பதிவு செய்ய போனேன். 21.03.2021ம் தேதி பூக்கடை சந்திப்பில் இரவு 09.00 மணிக்கு பிரச்சாரம் நடைபெற்று கொண்டிருந்தது. அந்த பிரச்சாரத்தின் போது பிரச்சனை நடந்தது. அதை வீடியோ பதிவு செய்தேன். அப்போது ஏன் விடியோ பதிவு செய்தீர்கள் என்று பிரச்சனை செய்தார்கள். 1வது எதிரி கேமராவை அடித்து உடைத்தார். முதலில் அடித்த போது கேமரா உடையவில்லை. அங்கிருந்து கிளம்பும் போது எப்படி கிளம்பலாம் என்று சொல்லி நான் பின்னால் ஒழிந்து வைத்திருந்த கேமராவை பிடுங்கி உடைந்து விட்டார். என்னுடன் ஸ்டீபன் என்பவர் தேர்தல் அதிகாரியாக வந்தார். தங்கராஜ்



என்பவர் ஓட்டுனராக வந்தார். ஸ்டீபன் என்பவரின் செல்போனை 1வது எதிரி உடைத்து விட்டார். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்து விட்டு ஸ்டீபன் புகார் கொடுத்தார். கேமராவின் மதிப்பு ரூ.1,90,000/- இருக்கும். எனது கேமரா சோனி NX5 மாடல் ஆகும்.

என்னிடம் காட்டப்படும் கேமரா என்னுடையது தான். அது சா.பொ.1. போலீசார் என்னை விசாரித்தார்கள். .

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

எனது கேமராவை மேற்கு பக்க காம்பவுண்டிற்குள் வீசினார்களா, அல்லது கிழக்கு பக்க காம்பவுண்டிற்குள் வீசினார்களா என்றால் எனக்கு திசை தெரியாது. ஆனால் காம்பவுண்டிற்குள் வீசினார்கள். கேமராவை போலீசார் தான் எடுத்தார்கள். அப்போது நானும் உடன் இருந்தேன். போலீசார் 09.30 மணிக்குள் சம்பவ இடத்திற்கு வந்து விட்டார்கள். புகார் கொடுப்பதற்கு முன்பாகவே போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விட்டார்கள். பிரச்சாரத்தின் போது பாதுகாப்பிற்கு போலீசார் இருப்பார்கள் என்றால் இல்லை. பிரச்சாரத்தின் போது எல்லா பக்கத்திலும் போலீசார் இருப்பார்கள் என்றும், ஆனால் நான் இல்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய கேமரா சோனி NX5 மாடல் ஆகும். சா,பொ.1ல் சோனி NX5 மாடல் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சா.பொ.1ல் சோனி NX கேம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சோனி NX5 மாடல் தான் அதை கேம் என்று சொல்வார்கள். ஆனால் சா.பொ.1ல் சோனி NX கேம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனது கேமராவை யாரும் உடைக்கவில்லை என்றும், பழைய கடையிலிருந்து உடைந்த கேமராவை வாங்கி கொடுத்தேன் என்றால் சரியல்ல. கேமராவை



எறியவில்லை. அடித்து உடைத்தார். என்னை ஒப்பந்த பணிக்கு அழைத்தது தொடர்பாக ஆவணத்தை போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை. வீடியோ எடுப்பதற்கு ஒப்பந்தம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்திற்கு போனேன். காவல்நிலையத்திற்கு 10.00 மணிக்கு போனேன். என்னுடன் ஸ்டீபன் மற்றும் தங்கராஜ் ஆகியவர்கள்

காவல்நிலையத்திற்கு வந்தார்கள். நாங்கள் வந்த வாகனம் கூட்டுறவு சங்க வாகனம் ஆகும். சம்பவம் நடக்கும் போது மின்சாரம் இருந்தது. எதிரிகள் கிளம்பும் போது மின்சாரம் போய் விட்டது. சம்பவ இடத்தில் 500 பேர் இருந்தார்களா என்றால் 20 பேர் இருந்தார்கள். சம்பவ இடத்தின் அருகே வீடும், கடைகளும் உள்ளன. எதிரிகளை சம்பவ நாளுக்கு பிறகு நீதிமன்றத்தில் தான் பார்க்கிறேன். சம்பவ நாளில் காவல்நிலையத்தில் வைத்து ஒருவரை பார்த்தேன். எதிரிகளின் பெயர்களை விசாரித்து தெரிந்து கொண்டோம். எதிரிகளின் பெயர்களை ஊர்மக்களிடம் விசாரித்தோம். யாரோ ஒருவர் சொல்லி தந்ததின் அடிப்படையில் பெயரை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகளுக்கு வேண்டாத நபர்கள் எதிரிகளின் பெயர்களை சொல்லி கொடுத்து புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. பிரச்சாரத்தின் போது வேட்பாளரை ஊருக்குள் வரக்கூடாது என்று பிரச்சனை செய்தார்களா என்றால் சரியல்ல. நான் சம்பவத்தின் போது இல்லாததால் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 191 /2023**

**Deposition of P.W.** 3

| | |
|---|---|
| Name | : தங்கராஜ் |
| S/o, D/o, W/o | : செல்லையா |
| Village | : |
| Taluk | : |

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:09.07.2025

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் புதுாரில் வசித்து வருகிறேன். நான் கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தில் ஓட்டுனராக பணியாற்றி வருகிறேன். பத்மனாபபுரம் தொகுதி வீடியோ பதிவு பணிக்காக நான் எங்கள் ஒன்றியத்தின் TN 21 AF 9724 என்ற பொலிரோ வாகனத்தை ஓட்டி வந்தேன். தேர்தல் அதிகாரியாக ஸ்டீபன் என்பவரும், புகைப்பட காரராக அபிலாஸ் என்பவரும் வந்தார்கள். 21.03.2021ம் தேதி இரவு 09.00 மணிக்கு பூக்கடை சந்திப்பில் அப்போதைய வேட்பாளர் மனோதங்கராஜ் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார். தேர்தல் அதிகாரியும், அபிலாசும் படம் எடுக்க போனார்கள். சிறிது நேரத்தில் சலசலப்பு ஏற்பட்டதாக தெரிந்தது. நான் வண்டியிலிருந்து இறங்கி போய் பார்த்தேன். கேமராவை உடைத்து எறிந்து விட்டார்கள். போலீசார் வந்து கேமராவை எடுத்தார்கள். தேர்தல் அதிகாரியின் செல்போனையும் உடைத்து விட்டார்கள். யார் உடைத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. போலீசார் காவல் நிலையத்தில் வைத்து என்னிடத்தில் கையொப்பம் வாங்கினார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை இல்லை